**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.154/2019**

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29–ம் நாள் செவ்வாய்க்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 29.08.2023 | தந்தை பெயர்: | சந்திமோகன் |
| பெயர்: | அருண்பாரத்<br>(PW-2 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | | சமயம்: | |
| சாதி: | | வயது : | 32/2023 |
| தொழில்: | கிராம்நிர்வாக அலுவலர், செம்பதனிருப்பு | | |

**குறுக்கு விசாரணை : 29.08.2023**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 2020-ம் ஆண்டுதான் கிராம் நிர்வாக அலுவலராக பணியில் சேர்ந்தேன். எனக்கு புல எண்.215 மற்றும் புல எண்.216-க்கான சிட்டா அடங்கள் மற்றும் 'அ' பதிவேடு புல வரைபடம் ஆஜர்செய்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்துள்ளது. அழைப்பாணையில் எந்த வகைபாடு சேர்ந்த புல எண்கள் என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புல எண்.215 மற்றும் புல எண்.216 க்கான நஞ்சை மற்றும் புஞ்சை மற்றும் நத்ததிற்கான ஆவணங்கள் கொண்டு வந்துள்ளேன். தாவா புல எண்.215 மற்றும் புல எண்.216 எங்கு உள்ளது என்று

தெரியுமா என்றால் போய் பார்த்தால்தான் தெரியும். புல எண்.216/2c-ன் மொத்த விஸ்தீரணம் 20 ஏர்ஸ் ஆகும். சாட்சி சான்றாவணம் 1-ல் 216/2C திருத்திற்கு முன்பும், திருத்திற்கு பின்பும் கலியபெருமாள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். கணினிமயமாக்கப்பட்ட பிறகு சா.சா.ஆ.7-ல் நூர்ஜகான்பீவி மற்றும் ஒரு நபர் பெயரில் உள்ளது. புல எண்.216/2c என்பது தற்போதய சிட்டாப்படி இருளப்ப படையாட்சி மகன் பன்னீர்செல்வம் மற்றும் அப்துல்ரஹிம் மகன் சிராஜிதீன் பெயரில் பதிவாகியுள்ளது அது ஏற்கனவே சா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பன்னீல்செல்வம் மற்றும் சிராஜிதீன் பெயரில் எவ்வாறு பெயர் மாற்றம் செய்யப்பட்டது பற்றி தெரியுமான என்றால் பழைய சிட்டா பதிவேடு பார்த்தால்தான் தொியும். பழைய சிட்டாவை நான் கொண்டு வரவில்லை. சா.சா.ஆ-13-ல் பன்னீல்செல்வம் மற்றும் ஒரு நபர் பெயரில் அடங்கள் பதிவாகியுள்ளது என்றால் சரிதான்.சா.சா.ஆ.13-ல் உள்ள மற்றொரு நபர் சிராஜிதீன் ஆகும். தற்போது 216/2C-கான அடங்களில் கலியபெருமாள் பெயர் இல்லை என்றால் சரிதான். சா.சா.ஆ.4 ஆனது புதிய புல படமா என்றால் சரிதான். சா.சா.ஆ.4-ல் பன்னீல்செல்வம், சிராஜிதீனுக்கு பாத்தியப்பட்ட இடம் எங்கு உள்ளது என்றால் தெரியாது. புல எண்.216/2c மற்றும் 216/3-ல் சா.சா.ஆ.5-ல் ந.கலியபெருமாள் பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

சா.சா.ஆ.5-ல் புல எண்.215/1A யார் பெயரில் உள்ளது என்றால் ந.கலியபெயருமாள் பெயரில் உள்ளது.புல எண்.215/1A .ன் மொத்த விஸ்திரணம் எவ்வளவு என்றால் 1 ெ ஹக்டர் 8 ஏர்ஸ் ஆகும். புல எண்.215/1A1 மொத்த விஸ்தீரணம் 1 ஏர்ஸ் ஆகும். புல எண்.215/1A2 விஸ்திரணம் ஒரு ெஹக்டர் 7 ஏர்ஸ்சாக இருந்து பட்டா உட்பிரிவு செய்யப்பட்டு 215/1A2A ஆக பிரிந்து 98.49 ஏர்ஸ் ஆக பிரிந்துள்ளது. புல எண்.215/1A2B 8.51 ஏர்ஸ் ஆக பிரிந்துள்ளது. அது சா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சா.சா.ஆ.6-ல் உட்பிரிவு செய்யப்படும்போது நா.க.எண்.மற்றும் தேதி குறிப்பிடப்படும் என்றால் சரிதான்.

அவ்வாறு சா.சா.ஆ.6-ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சா.சா.ஆ.2-ல் 215/1A1 என்பது 99 சதுர மீட்டர்தான் விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.8-ல் சிராஜிதீன் பெயர் மட்டும் புல எண். 215/1A2A-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ-4-ல் கலியபெயருமாள் பெயர் இல்லை என்றால் சரிதான். சா.சா.ஆ.3.ல் புல படத்தில் புல எண். 215/1A2A யார்யார் அனுபவத்தில் உள்ளது என்று எனக்கு தெரியாது. புல எண்.215 மற்றும் 216 யாார்யார் அனுபவத்தில் இருந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது. புல எண்.215-ல் தேசிய நெடுஞ்சாலைக்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புல எண்.215/1A1 மற்றும் புல எண்.215/1A2 இரண்டிலும் நிலம் எடுக்கப்பட்டுள்ளது. தாவா புல எண்.215 மற்றும் 216 பற்றி நேரடியாக தெரியாது என்றும் எனது சாட்சி ஏற்றுக்கொள்ள தக்கது என்றல் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**